

தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (22.11.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் ‘சட்டமன்ற நாயகர் கலைஞர்’ என்ற குழுவின் கூட்டம் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவரும், சட்டமன்ற நாயகர் கலைஞர் விழாக் குழு தலைவருமான மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவரும், சட்டமன்ற நாயகர் கலைஞர் விழாக் குழு இணைத் தலைவருமான கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா மற்றும் சட்டமன்ற நாயகர் கலைஞர் விழாக் குழு இணைத் தலைவர் முனைவர் கோவி.செழியன், சட்டமன்ற நாயகர் கலைஞர் விழாக் குழு உறுப்பினர்கள் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர்’ சா.பீட்டர் அல்போன்ஸ், முன்னாள் உறுப்பினர் சி.ஞானசேகரன், முன்னாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளர்கள் ப.டெல்லிதுரை மா.செல்வராஜ், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளரும், சட்டமன்ற நாயகர் கலைஞர் விழாக் குழு உறுப்பினர் செயலருமான முனைவர் கி.சீனிவாசன் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலக உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.கழகத்தின் சார்பில்
# ஊடக விவாதங்களில் கலந்து கொள்வோர்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.கழகத்தின் சார்பில் ஊடக விவாதங்களில் கலந்து கொள்வோருடன் கீழே குறிப்பிட்டுள்ள பேச்சாளர்களும் இணைந்து பங்கு பெறுவர்.

1. திரு.மயிலை த.வேலு
2. திருமதி தமிழரசி ரவிக்குமார்
3. டாக்டர் எழிலன் நாகநாதன்
4. திரு.கு.கருணாநிதி
5. திரு.நெல்லிக்குப்பம் புகழேந்தி
6. திரு.கரூர் முரளி
7. திரு.கோவை செல்வராஜ்
8. திரு.சூஃபி சுலைமான்
9. திரு.சூர்யா கிருஷ்ணமூர்த்தி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22.11.2023

தலைமைக் கழகம்,
தி.மு.க.

# விருதுநகரில் கனமழை!

விருதுநகர், நவ. 24-

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் காலை முதலே பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலையை யொட்டி அமைந்துள்ள பகுதிகளில் பலத்த இடியுடன் கூடிய கனமழை கொட்டி தீர்த்தது.

மழையின் காரணமாக ராமச்சந்திராபுரம் பகுதியில் உள்ள தரைப்பாலம் மூழ்கி மழை நீர் வெள்ளம் போல் ஓடியது. தொடர் மழையால் நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

# சிவகங்கை மறை மாவட்ட மூன்றாவது ஆயராக லூர்து ஆனந்தம் பதவி ஏற்பு!

## அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் - பீட்டர் அல்போன்ஸ் பங்கேற்பு!

சிவகங்கை. நவ.24-

சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்ட கத்தோலிக்க கிறித்தவ திருச்சபை அடக்கியதாக சிவகங்கை மறை மாவட்டம் உள்ளது. இந்த மறை மாவட்டத்தின் 3 வது ஆயராக முனைவர் லூர்து ஆனந்தம்பொறுப்பேற்கும் விழா 26 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4,00 மணிக்கு புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. புதிய ஆயர் திருப்பலி நிகழ்ச்சி திருத்தந்தை யரின் இந்திய தூதர் பேராயர்லியோபோல்டோ ஜிரல்லி, முன்னிலையில் மதுரை உயர்மறை மாவட்ட பேராயர் அந்தோணி பாப்புசாமி இணை ஆயர்கள் தூத்துக்குடி ஆயர் ஸ்டீபன் முன்னாள் சிவகங்கை மறை மாவட்ட ஆயர் சூசை மாணிக்கம் சென்னை மயிலை உயர் மறைமாவட்ட பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி ஆகியோர் நடத்தி வைக்கிறார்கள். அதனை தொடர்ந்து புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதிய ஆயர் லூர்து ஆனந்தம் அவர்களை வரவேற்று வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது. இந்த வாழ்த்து அரங்கத்தில் புதிய ஆயரை வாழ்த்தி கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன், மாநில சிறுபான்மை ஆணைய தலைவர் எஸ்பீட்டர்அல்போன்ஸ், எஸ். இனிகோஇருதய ராஜ் எம்.எல்.ஏ. பாண்டிச்சேரி ஆயர் முனைவர் பிரான்சிஸ் ஸ்கலிஸ்ட், சென்னை பிஷப் முனைவர் வி. தேவசகாயம், மனித நேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா மாவட்ட ஆட்சியர்கள் திருமதி ஆஷா அஜித், விஷ்ணுப்பிரியன், ராமநாதபுரம் சரக டி.ஐ.ஜி. எம். துரை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் பி.கே.அரவிந்த், தங்கதுரை ஆகியோர் பேசுகிறார்கள். இந்த நிகழ்ச்சியில் 25க்கும் மேற்பட்ட பிஷப்கள் மற்றும் 100க்கும்மேற்பட்ட பங்குதந்தையர் கள் மற்றும் பல்வேறு திருச்சபை யினர் கலந்து கொள்கிறார்கள். புதிதாக மூன்றாவது ஆயராக பொறுப்பேற்கும் லூர்து ஆனந்தம் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா திரு வரங்கத்தில் பிறந்தவர் . இவரது தந்தை லூர்து. தாயார் திருமதி அருளம்மாள் இவருடன் 3 சகோதரர்களும், 2மூத்த சகோதரிகளும் உள்ளார்கள். இவர் திருவரங்க தில் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி படித்து விட்டு பின்னர் கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியில் பி.யூ.சி.படித்தார் .கல்லூரி படிப்பினை கருமாத்தூர் புனித அருள் ஆனந்தம் கல்லூரியில் படித்தார். புதிய மறை மாவட்ட ஆயரின் பதவி ஏற்பு நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஆயர் வரவேற்பு குழு சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சூசைமாணிக்கம், பொருளாளர் சந்தியாகு, பங்குத்தந்தை ஜேசுராஜா, ஒருங்கிணைப்பாளர் ஜிடி. அந்தோணி மற்றும் விழா குழுவினர் செய்து வருகிறார்கள் .1985ல் சிவகங்கை மறைமாவட்டம் உருவானது. முதல் மறைமாவட்ட ஆயராக எஸ்.எட்வர்டு. பிரான்சிஸ், 2வது ஆயராக சூசை மாணிக்கம் ஆகியோர் பொறுப்பில் இருந்தார்கள். 3வது ஆயராக முனைவர் லூர்து ஆனந்தம் பொறுப்பு ஏற்கிறார்.

## புகைப்படக் கலைஞர் கோவை சுப்பு ஏற்பாட்டில்
# கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு புகைப்படக் கண்காட்சி!
## வேலூரில் அமைச்சர் துரைமுருகன் திறந்து வைக்கிறார்!

வேலூர், நவ. 24 -

பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு புகைப்படக் கண்காட்சி நாளை (25.11.2023 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் நடைபெறுகிறது.

இப்புகைப்படக் கண்காட்சியை கழகப் பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து சிறப்பிக்கிறார்.

இதில் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

நூற்றாண்டு விழா புகைப்பட கண்காட்சியை புகைப்படக் கலைஞர் கோவை சுப்பு ஏற்பாடு செய்துள்ளார்.








திருப்பூர் மாநகராட்சி, முத்தமிழறிஞர் கலைஞர் பேருந்து நிலையத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, வருகை புரிந்த ”முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தியினை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வரவேற்று கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா. கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மறக்க முடியாத அண்ணன் முரசொலி மாறன்!








ஒரு இயக்கம் - ஒரு கட்சி சிறப்பாக வளர்ந்து நிலை பெற வேண்டும் என்றால் அதன் கொள்கைகள் சிறப்பாக இருக்க வேண்டும் (Ideology) -அடுத்து அந்தக் கொள்கைகளை நடைமுறை படுத்த திட்டங்கள் நல்ல முறையில் அமைந்திட வேண்டும் (Programs) - அதை மக்கள் மத்தியிலே கொண்டு செல்ல நல்ல பணியாளர்கள் (Workers) இருக்க வேண்டும். இந்த மூன்றும் அமைந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். வேறு எந்த இயக்கங்களுக்கும் இல்லாத கொள்கைகள் கொண்டது. திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பார்கள்.

சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது, மனிதனை மனிதன் மதிப்பது, மூடநம்பிக்கைகளை ஒதுக்கி பகுத்தறிவுச் சிந்தனைகளை வளர்ப்பது, தாய்மொழி தமிழுக்கும் தமிழர்களுக்கும் ‘நல்வாழ்வு பெற உழைப்பது போன்ற அடிப்படைக் கொள்கைகளை கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை கடைப்பிடிப்பதிலும் அதனை நடைமுறைப் படுத்துவதிலும் அதனை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும் மிகச்சிறந்த பணியை அண்ணன் முரசொலி மாறன் செய்து காட்டியிருக்கிறார்.

எடுத்துக்காட்டாக அறிஞர் அண்ணா கட்டுரை 1969 பொங்கல் மலரில் மத்திய-மாநில உறவுகள் பற்றியும் அதிகாரங்கள் பற்றியும் எழுதிய உயிலுக்கு அண்ணன் மாறன் அவர்கள் கொள்கையை விளக்கமாக விரிவுரையாக மாநில சுயாட்சி என்ற மிகச்சிறந்த நூலாக படைத்து தமிழகத்துக்கு வழங்கினார்கள். அறிஞர் அண்ணா கட்டுரையில் குறிப்பிட்டபடி பதவியில் இருப்பதன் மூலம் இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் என்பதை சிந்திக்கக் கூடிய பொது மக்களின் கவனத்திற்கு தி.மு.க. கொண்டு வர முடியுமானால் அது உண்மையிலேயே அரசியல் உலகிற்கு செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்.

கவிஞர் நெல்லை
**குமார சுப்பிரமணியம்**
திருநெல்வேலி



அந்தப் பணியை சிறப்பாக தனது மாநில சுயாட்சி நூலில் சொல்லியிருக்கிறார். கடந்த 50 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் சிறப்பாக செயல்படுத்தி இன்றைய திராவிட மாடல் ஆட்சியில் முதல்வர் தளபதி அவர்கள் ஒன்றிய ஆட்சியில் உள்ள அதிகாரக்குவியலை எதிர்த்து பல வழிகளிலும் போராடி வருகிறார். இந்த கருத்து இந்தியாவெங்கும் பரவி வருகிறது.

அண்ணன் மாறன் 50 ஆண்டுகளுக்கு முன்பே தி.மு.க.வின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான ‘மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி’ என்ற கொள்கையை விளக்கி நூலாக மாநில சுயாட்சி என்ற சிறந்த நூலைத் தந்திருக்கிறார்கள்.

அந்த நூலில் பல்வேறு விளக்கங் களை எடுத்து கூறியிருக்கிறார்: மாநில சுயாட்சி என்றால் என்ன? மத்தியில் கூட்டாட்சி என்றால் என்ன? ஒற்றை ஆட்சி முறைக்கும் கூட்டாட்சி முறைக்கும் என்ன வேறுபாடு? மாநிலங்களுக்கு அதிகாரங்கள் அதிகார பரவலாக்குதல். அரசியல் நிர்ணயசபையில் நடைபெற்ற விவாதங்கள், கருத்துகள் என்று சுமார் 600 பக்கங்கள் அவரின் மாநில சுயாட்சி என்ற நூலில் அண்ணன் முரசொலி மாறன் தந்துள்ளார்கள். 50 ஆண்டுகளுக்கு முன் இந்த நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துகள் இன்றும் தொடர்வது கண்டு மலைத்து போய் இருக்கிறோம்.

இன்றைய தினம் அகில இந்திய அளவில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் மாநிலங்களுக்கு அதிகஅதிகாரம் வேண்டும் என்ற கருத்தை சொல்லி மற்ற மாநில முதல்வர்களும் ஏற்று அதை வலியுறுத்துவதை நாம் காண்கிறோம்.

1773-ல் இந்தியாவில் ஏற்பட்ட ஒன்றிய ஆட்சியில் அதிகாரங்கள் குவிந்து கிடந்தன. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்றும், அதிகாரம் பரவலாக்கப்படவேண்டுமென்றும்நீதிக்கட்சி அமைச்சர் கே.வி.ரெட்டி போன்றவர்கள் அப்போதே குரல் எழுப்பியதையும் மாறன் குறிப்பிட்டுள்ளார்.

மாநில சுயாட்சி நூலை எழுத நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களைப் படித்து அதிலிருந்து விளக்கம் தந்துள்ளார். 72 புத்தகங்களில் இருந்து 479 மேற்கோள்களும் அடிக்குறிப்புகளும் தந்துள்ளார். 479 மேற்கோள் கொடுத்ததற்கு அண்ணன் மாறன் ஒரு விளக்கம் தருகிறார். சாமான்யமாக நாம் சொன்னால் அது சாமான்யமாக கருதப்படுவது நம் கழகத்திற்கு ஏற்படுகின்ற துர்பாக்கிய நிலையாகும். இப்படி ஒரு பெரியவர் உங்களால் மதிக்கப்படுபவர் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால் அதை ஊன்றிக் கவனிப்பார்கள் என்ற ஆசை தான் மாறன் என குறிப்பிடுகிறார்.

சில செய்திகளை இன்றைய இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவாக மாநில ஆளுநர்கள் பற்றி நிறைய செய்தியை அண்ணன் மாறன் அவர்கள் மாநில சுயாட்சி நூலில் தந்திருக்கிறார். அரசியல் நிர்ணய சபையில் விஸ்வநாத தாஸ் அவர்கள் தந்த கருத்து இன்றைய நிலைக்கு பொருந்துவதாக இருக்கிறது. “இன்றைய பிரதமர் (நேரு) உலகத்தின் தலை சிறந்த மனிதர்களில் ஒருவர். நீங்கள் அவரிடமிருந்து நீதியை எதிர்பார்க்கலாம். அவருக்கென்று சுயநல காரியங்கள் எதுவும் கிடையாது. ஆனால் சுயநலநோக்கு கொண்ட பிரதமர் ஒருவர் இனி ஒருநாள் ஒன்றிய அமைச்சரவையில் பதவியேற்க நேரிடலாம். அந்த நேரம் முழுப் பெரும்பான்மையோடு ஒரு மாநில அரசை நடத்தும் கட்சிக்கு எதிராக கவர்னர்களைக்கொண்டு செயல்பட நினைத்தால் அப்படி ஒரு நிலை ஏற்படலாம் என்று எதிர்பார்க்கக்கூடாதா” என்று விஸ்வநாததாஸ் பேசியுள்ளது இன்று நடைபெறுகிறது.

பாரதிய ஜனதா கட்சியை சார்ந்த ஒரு கவர்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை பெற்ற அரசுக்கு இடையூறு செய்து தமிழக வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறார். கவர்னரைப் பற்றி புத்தகத்தில் நிறையவே இருக்கிறது. கவர்னர் பதவி அனாவசியமானது என்று நேருவின் சகோதரி விசய லெட்சுமி அவர்களே கூறி இருக்கிறார். ஏ.டி.மணி என்ற பாராளுமன்ற உறுப்பினர் 2.5.70ஆம் நாள் 1947க்கு பிறகு கவர்னர் பதவி என்பது அரசியலிலே புறக்கணிக்கப்பட்ட குப்பைகளை தூக்கிப்போடும் குப்பை கூடையாகிவிட்டது என்று கூறியிருக்கிறார்.

தி.மு.க. பிராந்திய கட்சி என்று மேலோட்டமாக சிலர் கருதலாம். ஆனால் எல்லா மாநில அரசுகளுக்கும் நியாயமான சுயாட்சி என்கிற அடிப்படையில் ஒரு உண்மையான கூட்டாட்சி உருவாவதற்குத் தான் தி.மு.க. பிரதிநிதியாக இருக்கிறது. செயல்படமுடியாத திறமையற்ற கொடுமையான ஒன்றிய அரசிற்கான தேசிய எதிர்ப்பைத்தான் தி.மு.க. பிரதிபலிக்கிறது என்று சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் 1967லேயே குறிப்பிட்டிருப்பது நூலில் காணப்படுகிறது. அன்று ராசாசி குறிப்பிட்டது போல இன்று கழகத்தலைவர் தளபதியின் முயற்சியால் ஏற்பட்டுள்ள இந்தியா (INDIA) கூட்டணி பல்வேறு மாநில உரிமைகளை பாதுகாக்க செய்கிறது என்று நாம் காண்கிறோம்.

ராசமன்னார் குழுவினர் கொடுத்த ஒன்றிய- மாநில உறவுகள் பற்றிய அறிக்கையை தி.மு.க. வில் ஆராய்ந்து அறிக்கை தர இருவர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இரா. செழியன், மாறன் குழு பரிசீலித்து தி.மு.க. சார்பில் ஏற்றுக் கொள்ள செய்தனர். செழியன் மாறன் குழு தந்த அறிக்கை மிகவும் முக்கியமானது சிறப்பாக இருந்தது.

மாநில ஆளுநர்கள் பற்றி அரசியல் நிர்ணய சபையில் பேசப்பட்டவை எல்லாம் சிறப்பாக மாநில சுயாட்சி நூலில் பதிவு செய்துள்ளார். இன்றைய இளைஞர்கள் மாநில சுயாட்சி நூலை படிக்கவேண்டும். 1773-ல் இந்தியாவில் ஒன்றிய ஆட்சி தொடங்கியது. அன்றிலிருந்து ஒன்றிய ஆட்சியில் மாநில அரசுக்கு அதிகாரம் பெறுவதற்கு எடுத்த முயற்சி எல்லாம் இந்த நூலில் பதிவு செய்திருக்கிறார்.

அண்ணன் மாறன் அவர்களின் எழுத்தில் முக்கிய செய்திகள், அபூர்வமான செய்திகள் நிறைய கிடைக்கும். 1917ல் நடைபெற்ற தேர்தலில் திருநெல்வேலி மாவட்ட தொகுதியில் இராம அய்யங்கார் என்ற பிராமணரை பிராமணர் அல்லாத டி.என். சிவஞானம் பிள்ளை தோற்கடித்ததை திராவிட இயக்க வரலாறு என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.

தி.மு.க. ஆட்சியை வெங்கட்ராமன் அவர்கள் கலைத்த நேரம் நாடாளுமன்றத்தில் பிரதமர் அவர்களைப் பார்த்து கெட் அவுட் (GET OUT) என்று பேசியுள்ளார். இப்படி பேசுவதற்கு எவ்வளவு தைரியம் வேண்டும் என்பதை நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. அண்ணன் முரசொலி மாறன் அவர்களைப் பற்றி எழுதிக் கொண்டே இருக்கலாம், மறக்க முடியாத கருத்தாளர். என்றும் நினைவு கொள்வோம்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் மக்களுடன் முதல்வர் குறைதீர்க்கும் முகாமை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். உடன் திண்டிவனம் சார் ஆட்சியர் தமிழரசன், பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் வெங்கடேசன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.